மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்குதல் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1994) நிறைவேற்றப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

(இ) இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1994). மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்)சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1994) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் சட்டத்தினை திருத்துவதற்கு ஒரு திருத்தச் சட்ட முன்வடிவினை இந்த மன்றத்திலே அறிவித்திருக்கிற இந்த நல்ல நேரத்தில், இன்றைக்கு பல்வேறு காரணங்களாலே, பல்வேறு வகையான வாகனங்களுக்கு வரி உயர்வைச் செய்திருக்கிறார்கள்.

@4-5-1994-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

3 ஆயிரம் கிலோ கிராம் ஏற்றக்கூடிய வண்டிக்கு 520 ரூபாயிலிருந்து 545 ரூபாய்க்கு என காலாண்டு வரியாக உயர்த்தி இருக்கிறார்கள். 25 ரூபாய்தான் குறைந்த அளவு ஏற்றியிருந்தாலும் கூட, இந்த வரி உயர்வின் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 20 கோடி ரூபாய் இந்த அரசுக்கு வரும் என்றாலும் கூட அரசாங்கமே, இதிலே—12, 13 கோடி ரூபாய் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக, அல்லது அரசாங்கத்தினுடைய வாகனங்கள் மூலமாக, 12, 13 கோடி ரூபாயைச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. போக்குவரத்துத் துறை இன்றைக்கு நஷ்டத்திலே இயங்கி வந்தாலும் கூட, மேலும் 10 கோடி ரூபாய் நஷ்டத்தைத் தாங்க வேண்டிய நிலை இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு வரி உயர்வு தேவைதானா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, கல்விக் கூடங்களுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 440 ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். கல்வி ஸ்தாபனங்களைப் பொறுத்த வரையில், அவைகளை இரண்டு வகையாகப் பிரித்துக் கொள்ளவேண்டும். ஒன்று, உயர்கல்வியிலே படிக்கின்ற பள்ளிக் கூடங்களில் இருக்கின்ற வாகனங்கள். அதாவது பணத்தைப் பெற்றுக் கொண்டு, அதிகமான அளவு வசதி படைத்தவர்கள் படிக்கின்ற பள்ளிகள், கல்லூரிகள், இப்படிப்பட்ட பள்ளிகளில் உள்ள வாகனங்களுக்காக 2 ஆயிரம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு வரி செலுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதை இன்னும் கொஞ்சம் அதிகமாகக்கூட போடலாம். ஆனால், அதே நேரத்தில், ஏழைஎளிய மாணவர்கள் அதிலும் குறிப்பாக பல்வேறு அனாதை விடுதிகள், பல்வேறு தொண்டு நிறுவனங்கள் வைத்திருக்கின்ற வாகனங்களுக்கு வரி உயர்வை ரத்து செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் மோட்டார் தொழிலில் சாதாரணமாக லாரி வைத்திருப்பவர்கள், பஸ் வைத்திருப்பவர்கள், ஒரு வண்டி, இரண்டு வண்டி வைத்திருப்பவர்கள் எல்லாம் மிகவும் மோசமான நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அன்றாடம் பிழைப்பு நடத்துவதற்கே கஷ்டப்படுகின்ற நிலை இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றுகின்ற வகையில், வரி உயர்வை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரத்து செய்யவேண்டும். ரத்து செய்வதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு ஏற்கனவே வரி உயர்வை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்தவுடனே, அவர்கள் பணம் வாங்க ஆரம்பித்துவிட்டார்கள். 12ஆம் தேதி வரை காலக்கெடு கொடுத்திருக்கிறார்கள். அதற்குள்ளாக இந்த வரியை எல்லாம் கட்ட வேண்டிய நிலைமை. சட்டமுன்வடிவு இப்போது வந்து கொண்டு இருக்கிறது. அதனாலே, அருள் கூர்ந்து இந்த வரி உயர்வை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

பிற்பகல் 1.25

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. கே. சின்னசாமி): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகின்றபோது இந்த வரி உயர்வால் அவர்களுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகிறது என்று இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். இந்த வரி உயர்வைப் பொறுத்தவரையிலும் நீண்ட நாட்களுக்குப் பிறகு உயர்வை நாம் ஏற்றியிருக்கிறோம். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போல இந்த வரி உயர்வினால் அவர்களுக்குப் பெரிதும் பாதிப்பு ஏற்படும் என்ற நிலையை அவர்கள் சுட்டிக்காட்டியது நியாயம், அல்ல. வரி உயர்வின், காரணமாகத்தான் அவர்களுக்கு வேண்டிய நலப் பணிகளை நம்மால் செய்து தரமுடியும். எதிலுமே வரி போடாமல் ஒரு அரசு, நடைபெற வேண்டுமென்று சொன்னால், அது இயலாத காரியம். ஆகவே வரி உயர்வை ஏற்படுத்துவதற்குக் கூட இன்றைக்கு அந்தச் சங்கத்தை சேர்ந்தவர்களை அழைத்துவைத்துப் பேசுகிறபோது அவர்கள் மனமகிழ்ச்சியோடு இருந்தார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். ஆகவே அவர்களுக்கு வரிகளை ஓரளவிற்கு குறைந்த அளவிற்கு உயர்த்தி பல்வேறு நலப் பணித் திட்டங்களை நாம் செய்துகொண்டிருக்கிறோம். அதைத்தான் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் குறிப்பிட்டுக் காட்டுகிறபோது யாரிடத்திலே வரி போடவேண்டும். அந்த வரியைப் பெற்று யார் யாருக்கு— ஏழை எளிய மக்களுக்காகப் பணியாற்ற வேண்டுமென்பதைக்கூட அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

கல்வி நிறுவனங்களைப் பற்றிச் சொல்கிறபோது ரூ. 1,500 லிருந்து ரூ. 2,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். கல்வி நிறுவனங்களினுடைய நிலை பற்றி உங்களுக்குத் தெரியும் தனியார் வைத்திருக்கிற கல்வி நிறுவனங்களில் முதலிலே அங்கே செல்கிற மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ. 45 என்று இருப்பதை ரூ. 100 ஆகக் கூட மாற்றியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கெல்லாம் இது பளுவாக இருக்காது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே நல்ல கல்வி நிறுவனங்களுக்கெல்லாம் நம்முடைய போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக ஏலம் விடுகின்ற பேருந்துகளைக் குறைந்த விலையிலே அவர்களுக்கெல்லாம் நாம் தந்துகொண்டிருக்கிறோம். ஆகவே அதிலேகூட பாதிப்பு என்கிற நிலை இருக்காது. அதைப்போல ரிக் என்று சொல்கிறார்களே, அதிலே கோடிக்கணக்கான ரூபாயை இன்றைக்குச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஒரு தொகையை ரூ. 2,500 என்று நாம் உயர்த்தியிருக்கிறோம். ஆகவே இந்த வரி விதிப்பு அவர்களுக்குப் பெரிய பளுவாக இருக்காது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மாண்புமிகு

உறுப்பினரவர்கள் கூறியதைப்போல அவர்களும் இதை ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தாலே மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1994) நிறைவேற்றப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. சட்டமுன் வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) மின்சார (பயனீட்டிற்கான வரி விதிப்பு) திருத்தச் சட்டமுன் வடிவு 1994.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டிற்கான வரி விதிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1994). மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (பயனீட்டிற்கான வரி விதிப்பு) திருத்தச் @சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1994) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் திருத்தத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

@4-5-1994-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.